30.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "நாட்டின் மொத்த உற்பத்தியில் வேளாண்மையின் பங்களிப்பு குறைகிறது'

நாட்டின் மொத்த உற்பத்தியில், வேளாண்மையின் பங்களிப்பு குறைந்து வருவது கவலைக்குரியது என இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பின் தலைவர் எம்.சி வர்ஷ்னேயா தெரிவித்துள்ளார்.

"தேசிய வேளாண் ஆராய்ச்சி, கல்வி திட்டங்களின் வாயிலாக தொழிற்கல்வியின் முக்கியத்துவம்' எனும் தலைப்பிலான இரண்டு நாள் கருத்தரங்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இதில், எம்.சி. வர்ஷ்னேயா பேசியதாவது:-

நாட்டின் மொத்த உற்பத்தியில் வேளாண்மையின் பங்களிப்பு எப்போதுமில்லாத வகையில் குறைந்து வருகிறது. சுமார் 49 சதவீதத்தினர் மட்டுமே வேளாண் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர், இத்தகைய சூழலில் பண்ணையில் வேலை செய்யும் பெண்களுக்கு தொழிற்பயிற்சிகளைக் கொடுப்பதன் மூலமாக சுமார் 20 முதல் 30 சதவீத வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார்.

இதையடுத்து, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் துணை பொது இயக்குநர் (கல்வி) என்.எஸ். ரத்தோர் பேசியதாவது:

வேளாண்மை, அதனைச் சார்ந்த 125 துறைகளுக்குத் தேவைப்படும் திறன் ஊக்கம் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்கி, வறுமையைப் பெரிய அளவில் அகற்றிட முடியும்.

வேளாண்மை, அதன் சார்பு துறைகளுக்கு திறன் ஊக்கம் பெறுவதற்கான தொழிற்கல்வியை 3.3 சதவீதத்தினர் மட்டுமே பெற்று வருகின்றனர். இவ்வாறு பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நோக்கத்திலும் இரண்டாவது பசுமைப் புரட்சியை இத்தகைய தொழில் கல்வி மற்றும் விரிவாக்க பணிகள் மூலம் ஏற்படுத்திட முடியும் என்றார்

கருத்தரங்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் க. திலகர் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சி. பாலச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாடிகளில் காய்கறி தோட்டம்: தோட்டக்கலைத் துறையினர் அறிவுறுத்தல்

திருவள்ளூர் மாவட்ட மக்கள் தங்களது வீடுகளில் சூழும் வெப்பத்தில் இருந்து தப்பிக்க வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்கலாம் என தோட்டக் கலைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

ஆண்டுதோறும் பூமியில் சூரிய வெப்பம் அதிகரித்து வருகிறது. வாயுமண்டலமும் மாசடைந்து வருகிறது. இதையடுத்து அதிகளவில் மரக்கன்றுகளை நட்டுவைத்து பூமியின் உஷ்ணத்தைக் குறைக்கும் வகையில், தமிழக அரசின் அறிவுறுத்தலின் பேரில், தலைவர்கள் பிறந்தநாளில் மரக்கன்று நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

தற்போது வீடுகளில் அதிகரித்து வரும் கடுமையான வெப்பம், அனல் காற்றைத் தடுக்க, வசதியுள்ளவர்கள் தங்கள் வீட்டு மாடிகளில் காய்கறி தோட்டம் அமைக்கலாம் என தோட்டக்கலைத் துறையினர் கூறியுள்ளனர்.

## மகளிர் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

மகளிர் விவசாயிகள் மேம்பாட்டுக் திட்டத்தின் தொடக்க விழா கும்மிடிப்பூண்டியை அடுத்த மாதர்பாக்கத்தில் உள்ள தேசிய வேளாண் நிறுவன அலுவலகத்தில் தொடங்கப்பட்டது.

விழாவுக்கு மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் கிருஷ்ணம்மாள் தலைமை வகித்தார். தேசிய வேளாண் நிறுவன இயக்குநர் எஸ்.முருகன் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து மகளிர் சமூக வள ஒருங்கிணைப்பாளர்கள் 26 பேருக்கு விவசாயத்தை மேம்படுத்துவது குறித்தும், நவீன விவசாய முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை தேசிய வேளாண் நிறுவனத்தைச் சேர்ந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் கஜேந்திரன், வார்டு உறுப்பினர் மூர்த்தி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## கோடை வெப்பத்தில் இருந்து தப்பிக்க வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்கலாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மக்கள் தங்களது வீடுகளில் அனல் மற்றும் வெப்பத்தில் இருந்து தப்பிக்க வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்கலாம் என தோட்டக் கலைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்ததையடுத்து ஆண்டுதோறும் பூமியில் சூரிய வெப்பம் அதிகரித்து வருகிறது. மேலும் வாயுமண்டலமும் மாசடைந்து வருகிறது. இதையொட்டி அதிகளவில் மரக்கன்றுகளை நட்டுவைத்து பூமியின் உஷ்னத்தை குறைக்க வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தலின் பேரில் தலைவர்கள் பிறந்தநாளில் மரக்கன்று நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது வீடுகளில் அதிகரித்து வரும் கடுமையான வெப்பம் மற்றும் அனல் காற்றை தடுக்க வசதியுள்ள மாதிகளில் மாடி காய்கறி தோட்டம் அமைக்கலாம் என தோட்டக்கலைத் துறையினர் கூறியுள்ளனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ.

வீரராகவ ராவ், திட்டக் குழு கூட்டத்தின் போது இமாவட்டத்தில் இட வசதியுள்ள மாடிகளில் தோட்டக்கலைத் துறை சார்பில் இட வசதி உள்ள வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்க மக்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். இதன் மூலம் பொதுமக்கள்

வெப்பத்தில் இருந்து தப்பிக்கவும், வீட்டுக்குத் தேவையான காய்கறிகளை எடுத்துக் கொள்ளவும் ஏதுவாக இருக்கும் என தோட்டக் கலைத்துறையினர் கூறினர்.

## வரத்து குறைவால் காய்கறி விலை உயர்வு: தக்காளி கிலோ ரூ.50, பட்டாணி ரூ.150

கோடை வெயில் காரணமாக வரத்து குறைவாக இருப்பதால் மதுரை சந்தையில் காய்கறி விலைகள் உயர்ந்துள்ளன.

கடந்த சில மாதங்களாக காய்கறி விலைகள் மிகவும் குறைந்து காணப்பட்டன. தக்காளி, கத்தரிக்காய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற மக்கள் அதிகம் பயன்படுத்தும் காய்கள் விலை குறைவாகவே இருந்து வந்தது.

நல்ல தட்பவெப்பம் நிலவியதால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தியாகிக் கொண்டிருந்தன. இதன் காரணமாக மதுரை சந்தைக்கு காய்கறி வரத்தும் அதிக அளவில் இருந்து. விலை மலிவாக இருந்ததால் பொதுமக்கள் அதிக அளவில் காய்கறிகளை வாங்கி பயன்படுத்தினர்.

இந்நிலையில், கிலோவுக்கு ரூ.28 வரை விற்கப்பட்ட நாட்டுத் தக்காளி ரூ.50 ஆக உயர்ந்துள்ளது. பெங்களூரு தக்காளி கிலோ ரூ.38 ஆக உயர்ந்து உள்ளது. இதே போல் கத்தரிக்காய் ரூ.20-க்கும், வெண்டைக்காய் ரூ.40-க்கும் விற்கப்படுகிறது. உருளைக்கிழங்கு விலை கிலோ ரூ.30 ஆக இருந்தது. அவரைக்காய் விலை கிலோ ரூ.45 ஆக இருந்தது. பட்டர்பீன்ஸ் கிலோ ரூ.75 க்கும், சோயா பீன்ஸ் ரூ.100க்கும் விற்கப்படுகிறது. பச்சைப் பட்டாணி கிலோ ரூ.85-இல் இருந்து ரூ.150 ஆக உயர்ந்து விட்டது. காலிபிளவர் ஒன்று ரூ.20, முட்டைக்கோஸ் கிலோ ரூ.25, முருங்கைக்காய் கிலோ ரூ.40 ஆக விலை அதிகரித்துள்ளதாக மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த விற்பனை அங்காடி வியாபாரிகள் தெரிவித்தனர். அதே சமயம் பெரிய வெங்காயம் ரூ.18, சிறிய வெங்காயம் ரூ.35 என்ற அளவில் நீடிக்கிறது.

கோடை காரணமாக வரத்து குறைந்ததால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மழைக்காலம் ஆரம்பித்த உடன் காய்கறி வரத்து அதிகரிக்கும் எனவும், இதனால் காய்கறி விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வறட்சி காலத்தில் மண்ணின் ஈரம் காக்க விவசாயிகள் கையாள வேண்டிய நுட்பங்கள்: வேளாண்துறை யோசனை**

வறட்சி காலத்தில் மண்ணின் ஈரம் காக்க விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து பழனி வேளாண்துறை அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பழனி வேளாண்துறை உதவி இயக்குநர் சுருளியப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சாகுபடி செய்த பயிர்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வைக்கோல் அல்லது தென்னை நார்க் கழிவு போன்றவைகளை நிலப் போர்வையாக இருக்குமாறு நன்கு தூவி விட்டு, சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாக பூமியில் படுவதை தடுக்கலாம். இம்முறையில் நீர் பாய்ச்சப்பட்ட நிலங்களில் நீர் ஆவியாவதை தடுப்பது மட்டுமல்லாமல் களை வளர்வதையும் கட்டுப்படுத்தலாம்.

கோடையில் சாகுபடி செய்யப்பட்ட இறவை மக்காச்சோளம், பயறு வகைகளில் மேற்க்கண்டபடி மூடாக்கு போடுவதாலும், நீர் தேவை அறிந்து நீர்ப்பாய்ச்சுவதாலும், மகசூல் இழப்பைக் குறைக்கலாம்.

மேலும் மாலை நேரங்களில் நீர் பாய்ச்சும் பணியினை செய்து நீண்ட நேரம் வரை மண் ஈரம் காத்து வறண்ட சூழலிலிருந்து பயிரைக் காக்கலாம்.

மலைப்பகுதிகளில் ஆழச்சால் அகலப்பாத்தி முறையினை கடைபிடித்து, கோடை மழை கிடைக்கும் போது மழைநீரை வழிந்தோடச் செய்வதன் மூலமும் நிலத்தின் ஈரத்தன்மையை அதிகப்படுத்தலாம். மேலும் நீர் பாய்ச்சும் போது, மண் ஈரம் நீண்ட நேரம் காத்திட, ஒரு பாத்தி விட்டு மறு பாத்தி நீரைப் பாய்ச்சினால் மிகவும் ஏற்றதாக இருக்கும். குறைந்த நீரைக் கொண்டு மரப்பயிர்கள், சாகுபடி செய்யப்பட்ட கரும்பு போன்ற பயிர்களைக் காக்க சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசன முறைகளையும், இலைவழி உரம் தெளிப்பு, நீரில் கரையும் உரம் போன்றவற்றை கையாளலாம். முருங்கை சாகுபடியில் ஊடுபயிராக நிலக்கடலை, உளுந்து அல்லது வெங்காயம் போன்ற பயிர்களை சாகுபடி செய்தலில் உள்ள நீர் மேலாண்மையால் இரட்டிப்பு வருமானம் கிடைக்கும்.

வரப்புப் பயிராக ஆமணக்கு பயிரிடலாம். காலையில் வெயில் வரையிலும், மாலை வெயிலின் தாக்கம் குறைந்த நேரத்திலும் விவசாயப் பணிகளாகிய

களையெடுத்தல், மருந்து தெளித்தல், உரமிடல் போன்ற பணிகளை மேற்கொள்வதால் விவசாயிகள் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மானாமதுரையில் ஆலங்கட்டி மழை**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வெள்ளிக்கிழமை மாலை சூறைக் காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்ததில், வீட்டின் கூரை, வாழை மரங்கள் சேதமடைந்தன.

மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் கடந்த சில நாள்களாக வெயில் வாட்டி வந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை மாலை இப்பகுதிகளில் பலத்த காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இதனால், திருப்புவனம் அருகே லாடனேந்தலில் சாலையின் குறுக்கே மரம் சாய்ந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தொடர்ந்து, வெள்ளிக்கிழமை பகலில் வெயில் கொளுத்திய நிலையில், மாலையில் மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் சூறைக் காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது. மானாமதுரை சிப்காட் பகுதியில் ஆலங்கட்டி மழை பெய்ததால், சாலையில் ஐஸ் கட்டிகள் கிடந்தன.

மானாமதுரை அருகே மேலப்பசலை கிராமத்தில் சூறைக்காற்று காரணமாக 5 வீடுகளின் ஓடுகள் சரிந்து விழுந்து நொறுங்கின. மேலும், இக் கிராமத்தில் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தன. இரவு வரை மழை தொடர்ந்ததால், அவ்வப்போது மின்தடை ஏற்பட்டு மானாமதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகள் இருளில் மூழ்கின. கடந்த இரு நாள்களாக மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பெய்து வரும் மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து குளுமை நிலவுவதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி

ராமநாதபுரம் அருகே சக்கரக்கோட்டை ஊராட்சிக்கு உள்பட்ட சேது நகர் சமுதாயக்கூடத்தில், மகளிர்க்கான இலவச பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேசிய பல்லுயிர் பரவல் ஆணையமும், பசுமை பாரத இயக்கமும் இணைந்து நடத்திய இப்பயிற்சி முகாமை, சக்கரக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.எம். நூர்முகம்மது தலைமை வகித்து தொடக்கி வைத்தார். தேசியப் பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஏ. பெர்னாடிக்ட், சேது நகர் கிராமத் தலைவர் கே.எஸ். முனியசாமி, பசுமை பாரத இயக்க நிர்வாகி பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக, எஸ். ஜோதிதாசன் வரவேற்றார். இதில், பனை ஓலையினால் 10 வகையான தொப்பிகள், சிறுவர் விளையாட்டுப் பொருள்கள், இயற்கை உரங்கள் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பயிற்சியை, பசுமை பாரத இயக்க நிர்வாகி மைக்கேல்ராஜ், செந்தில்குமார், லெட்சுமண பூபதி, பத்மா ஆகியோர் நடத்தினர். மேலும், பனை மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட தசாமிர்த பொடி மற்றும் தசாமிர்த கரைசல் இயற்கை உரத் தயாரிப்பு குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

பின்னர், பனை ஓலையினால் பல்வேறு பொருள்கள் தயாரிப்பது குறித்தும், ஏற்றுமதி செய்வது குறித்தும் பசுமை பாரத இயக்கத் தலைவர் பா. தீனதயாளன் பேசினார்.

## துவரை மகசூலை அதிகரிக்க வேளாண் துறை அறிவுரை

திருப்பூர் மாவட்டத்தில் துவரை மகசூல் செய்வதன் மூலம் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பாசிப் பயறு, உளுந்து, தட்டை, கொள்ளு, கொண்டைக்கடலை போன்ற பயிறு வகைகள்

விளைவிக்கப்படுகின்றன. இதற்கு அடுத்ததாக 250 ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரியாக துவரை சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், மானாவாரியில் கடலை, பாசிப் பயிறு, உளுந்து ஆகிய பயிர்களுடன் ஊடுபயிராக துவரை பயிரிடப்படுகிறது. இதனால், ஹெக்டேருக்கு ஆயிரம் கிலோ என்ற அளவே மகசூல் கிடைக்கிறது. உற்பத்தியைப் பெருக்க நாற்று விட்டு நடவு செய்யும் தொழில்நுட்பத்தை கையாளலாம். இதனால், இரண்டு மடங்கு மகசூல் கிடைக்கும்.

நீண்டகால வயதுடைய ரகங்களுக்கு 45 நாள்கள், நடுத்தர வயதுடைய ரகங்களுக்கு 35 நாள்களும் குறைந்த வயதுடைய ரகங்களுக்கு 25 நாள்கள் வைத்தும் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நீண்டகால வயதுடைய ரகத்துக்கு 6-க்கு மூன்று அடி இடைவெளி விட்டு நடுத்தர ரகத்துக்கு 4-க்கு 3 அடி இடைவெளி குறைந்த வயதுடைய ரகம் 3-க்கு 2 அடி இடைவெளி விட வேண்டும். நடவு வயலை 3 முறை சுட்டிக் கலப்பை மற்றும் கொச்சிக் கலப்பை அல்லது ரோட்டாவேட்டர் மூலம் கட்டிகள் இல்லாமல் நன்கு உழுதல் வேண்டும்.

அதன் பின்பு குறிப்பிட்ட இடைவெளியில் பார்கள் அமைத்து குழி தோண்டி அதில் நாற்று நடவு செய்ய வேண்டும்.

சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சினால் குறைந்த அளவு தண்ணீரே செலவாகும். நடவு செய்த 20 மற்றும் 30 நாள்களில் பயிரின் நுனியைக் கிள்ளி விட வேண்டும். பக்கவாட்டு கிளைகள் அதிக அளவில் வளர்ந்து பூங்கொத்து உருவாகி இருமடங்கு மகசூல் கிடைக்கும். துவரைச் செடிக்கு முறையான விகிதத்தில் மருந்து அடிக்க வேண்டும். பயிரின் பூ மற்றும் பிஞ்சு பருவமானது

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வராதவாறு நடவு செய்வது அவசியம் என்று அறிவுறுத்தியுள்ளனர்.

## ரூ.1.15 கோடிக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 15 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,530 மூட்டைகளில் 2,22,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 51-க்கும், அதிகபட்சமாக ரூ. 54.35-க்கும் என சராசரியாக கிலோ ரூ. 53.05-க்கு விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 39.10-க்கும், அதிகபட்சமாக ரூ. 50.80-க்கும் என சராசரியாக கிலோ ரூ. 47.70-க்கு விற்பனையானது.

மொத்தம் ரூ. 1 கோடியே 15 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 36.30 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 36.30 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 311 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 1.91 டி.எம்.சி.

## 2 நாளில் 72,000 பேர் பார்வையிட்ட உதகை மலர்க் காட்சி

உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெற்று வரும் 3 நாள் மலர்க் காட்சியை முதலிரண்டு நாள்களில் சுமார் 72,000 பேர் பார்வையிட்டுள்ளனர்.

உதகையின் மலர்த் திருவிழாவான மலர்க் காட்சி அரசினர் தாவரவியல் பூங்காவில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. 120-ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தக் கண்காட்சியின் தொடக்க நாளில் சுமார் 35,000 பேர் நுழைவுச்சீட்டு பெற்று பார்வையிட்டுள்ளனர். இதையடுத்து, இரண்டாம் நாளான சனிக்கிழமை சுமார் 37,000 பேர் பார்வையிட்டனர்.

முதலிரண்டு நாள்களில் மட்டும் 72,000 பேர் இந்த மலர்க் காட்சியைப் பார்வையிட்டுள்ளனர். இது கடந்த ஆண்டின் மலர்க் காட்சியில் முதலிரண்டு நாள்களின் எண்ணிக்கையை விட 21,000 கூடுதலாகும். ஞாயிற்றுக்கிழமை மலர்க் காட்சியின் நிறைவு நாளாகும். உதகையில் சனிக்கிழமை பிற்பகலில் பரவலாக பலத்த மழை பெய்தது. சுமார் 2 மணி நேரத்தில் அரசினர் தாவரவியல் பூங்காவில் 21 மி.மீ. மழை பதிவானது. மலர்க் காட்சியின் காரணமாக உதகை - மேட்டுப்பாளையம் சாலை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. உதகையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் அனைத்து வாகனங்களும் கோத்தகிரி வழியாகவே செல்ல வேண்டும். அதேபோல, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை வரும் வாகனங்கள் குன்னூர் வழியாகவே வர வேண்டும். உதகை நகரிலும் பெரும்பாலான சாலைகள் ஒருவழிப் பாதையாகவும், போக்குவரத்து தடை செய்யப்பட்ட சாலையாகவும் மாற்றப்பட்டுள்ளதால் நகரில் கடும் வாகன நெரிசல் நிலவுகிறது.

"வேளாண்பொருளுக்கு விலை நிர்ணயிக்க விவசாயக்குழு'

அரசு ஊழியர்களுக்கு ஊதியக் குழு அமைத்து ஊதிய விகிதம் அறிவிப்பதைப்போல விவசாயிகளின் வேளாண் பொருளுக்கு விலை நிர்ணயிக்கும் வகையில் விவசாயக் குழு அமைக்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும் என்றார் இந்திய விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச்செயலர் செ. நல்லசாமி.

புதுக்கோட்டையில் சனிக்கிழமை அவர் மேலும் பேசியது:

புதுக்கோட்டை மாவட்டத்தை மீட்டெடுக்க காவிரி- வைகை- குண்டாறு இணைப்புத் திட்டத்தை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும்.

மேட்டூர் அணை கட்டிய 82 ஆண்டுகளில் 40 ஆண்டுகள் நிரம்பிய உபரி நீர் வீணாகக் கடலில் கலந்தது. இந்த நீரை கால்வாய் மூலம் புதுக்கோட்டைக்கு திருப்பிவிட்டிருந்தால் விவசாயம் நல்ல வளர்ச்சி கண்டிருக்கும். அத்திக்கடவு, அவினாசி திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனில் பாண்டியாறு, புண்ணம்புழா திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் தமிழகத்துக்கு 14 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும். கேரளத்துக்கு மின்சாரமும் கிடைக்கும். எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரம் கருதி இரு மாநில அரசுகளும் அத்திட்டத்தை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி உண்மையான விவசாயிகளுக்கு சென்றடையவில்லை.

இப்பிரச்னையில் அரசு விவசாயிகளை சிறு, குறு என பிரித்துப் பார்ப்பது தவறு. அனைவருக்குமே பயன் கிடைப்பதே நியாயமானது. காவிரி நீர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மத்திய, மாநில அரசுகள் மதிக்கவில்லை. இந்தியாவில் 60 சதவிகித விவசாயிகள் அரசிடம் கையேந்துபவர்களாகவே உள்ளனர். இந்நிலைமை மாற அரசு ஊழியர்களுக்கு ஊதிய கமிஷன் அமைப்பது போல் விவசாயிகளின் விலை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க விவசாய கமிஷன் அமைக்க வேண்டும். இந்தியாவில் 560 சர்க்கரை ஆலைகள் உள்ளன. விவசாயிகளின் கரும்புக்கு அதிக விலை கேட்டால் நஷ்டம் வருவதாக ஆலைகள் கூறுகின்றன. எனவே, விவசாயிகள் கொடுக்கும் கரும்பை அரைத்துக் கொடுப்பதற்கு மட்டும் கூலி வாங்கிக் கொண்டு கரும்பில் இருந்து வரும்

பொருள்களை விவசாயிகளிடம் கொடுத்தால் அதை சந்தைப் படுத்தி அதில் அதிக லாபம் பெற முடியும். அதைச் செய்ய மாட்டார்கள்.

இந்நிலை மாற வேண்டுமெனில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க உறுதியான அமைப்பு ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஜி.எஸ். தனபதி, செங்கோல், சி. அப்பாவுபாலாண்டார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஜூன் 3 வரை கர்நாடகத்தில் பரவலாக கோடை மழை: பெங்களூரு வானிலை ஆய்வு மையம்

கர்நாடகத்தில் பரவலாக ஜூன் 3-ஆம் தேதி வரை கோடை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம் மற்றும் தென்கர்நாடகத்தின் உள்பகுதிகளின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது. அதேபோல, வடகர்நாடகத்தின் உள்பகுதியில் ஒருசில பகுதிகளில் மட்டும் மழை பெய்துள்ளது.

தென்கன்னட மாவட்டத்தில் மணி, சிக்பளாப்பூர் மாவட்டத்தில் தொண்டேபாவியில் தலா 90 மி.மீ., தென்கன்னடத்தின் பன்ட்வால், சிக்பளாப்பூர் மாவட்டத்தின் சிந்தாமணியில் தலா 70 மி.மீ. மழை பதிவாகின.

கர்நாடகத்தில் நிலவிய அதிகபட்ச தட்பவெப்பத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடலோர கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகள், தென்கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் வழக்கத்தைவிட கூடுதலாக தட்பவெப்பம் இருந்தது.

வட கர்நாடகத்தின் உள்பகுதிகளில் வழக்கமான வானிலை நிலவியது. கலபுர்கியில் அதிகபட்சமாக 41.5 டிகிசி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது.

விவசாயிகளுக்கு எச்சரிக்கை

அடுத்த 24 மணி நேரத்தில் தென்கர்நாடகத்தின் உள்பகுதியைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் மிதமானது முதல் பலத்த மழை பெய்யக்கூடும். கடலோர கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழை

பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட கர்நாடகத்தின் உள்பகுதியைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் லேசான மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

வானிலை முன்னறிவிப்பு

அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம் மற்றும் தென்கர்நாடகத்தின் உள்பகுதியின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பிருக்கிறது. தென்கர்நாடகத்தின் அனைத்து பகுதிகளிலும் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதேபோல, வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் மட்டும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். ஜூன் 3-ஆம் தேதி கடலோர கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகள், தென்கர்நாடகம் மற்றும் வட கர்நாடகத்தின் உள்பகுதிகளின் ஒருசில பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும் வாய்ப்புள்ளது.

பெங்களூரில் மழை

அடுத்த 48 மணி நேரத்தில் பெங்களூரில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த 2 நாள்களில் பெங்களூரில் தட்பவெப்பம் அதிகபட்சமாக 28 டிகிரி மற்றும் குறைந்தபட்சமாக 20 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தேயிலை ஏலத்தில் 92 சதவீதம் விற்பனை

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏலத்தில், 92 சதவீதம் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 21க்கு நடந்த ஏலத்தில், 6 லட்சத்து, 54 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 4 லட்சத்து, 51 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 2 லட்சத்து, 39 ஆயிரம் கிலோ இருந்தது. ஏலத்தில், 92 சதவீதம் விற்பனையானது. ஒரு ரூபாய் விலையேற்றம் இருந்தது. சி.டி.சி., ரகத்தில், உயர்ந்தபட்ச விலை யாக, தேயிலை தூள் கிலோ, 250 ரூபாய்;

ஆர்தோடெக்ஸ் ரகத்துக்கு, 246 ரூபாயும் கிடைத்தது. சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை, 79 ரூபாய் முதல், 82 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 130 ரூபாயில் இருந்து, 135 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை, 93 ரூபாயில் இருந்து, 95 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது. இதன் மதிப்பு, 5 கோடியே 89 லட்சம் ரூபாய் ஆகும்.

## கழிவு தக்காளியும் காசாகும் நேரமிது

வடமதுரை: விலை குறைந்த நேரத்தில் விளை நிலங்களிலேயே கழிக்கப்படும் தக்காளி பழங்கள் தற்போதைய விலை உயர்வால், சிந்தாமல், சிதறாமல் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை, அய்யலுார், கோபால்பட்டி, ஒட்டன்சத்திரம் உள்பட அனைத்து பகுதியிலும் தக்காளி விவசாயம் நடக்கிறது. சில நேரங்களில் தக்காளி கடும் விலை வீழ்ச்சி அடைந்து, விலை கட்டுபடியாகாமல் வயல்களிலேயே பறிக்காமல் அழுக விடப்படும் பரிதாப நிலையும் ஏற்படும்.

திடீரென வரத்து குறைந்து, விலை உச்சத்திற்கு சென்று 'ஜாக்பாட்' லாபம் பார்க்கவும் வாய்ப்பு கிடைக்கும். இதனால் தக்காளி மீது 'அதிர்ஷ்ட' நம்பிக்கை வைத்து மனம் தளராமல் பயிரிடும் விவசாயிகள் அதிகம் உள்ளனர்.

தொடர்ந்து வெயில் தாக்கம் நீடித்ததால் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை தக்காளி வரத்து அதிகரித்து அய்யலுார் மார்க்கெட்டில் 15 முதல் 17 கிலோ வரையுள்ள பெட்டிக்கு ரூ. 200 முதல் 300 வரை விலை இருந்தது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால் தக்காளி விவசாயம் பாதிப்பிற்குள்ளாகி வரத்து குறைந்தது.

ஹை- பிரிட் ரக தக்காளிக்கு பெட்டிக்கு ரூ.650 வரை கமிஷன் மண்டியில் விலை ஏகிறது. பெட்டிக்கு 3 கிலோ வரை சேதாரமாகும் நிலை இருப்பதால் வியாபாரிகள் சில்லரை விற்பனையில் கிலோ ரூ.50 க்கு விற்கின்றனர்.

இதனால் முன்பு வயல்களிலேயே கழிக்கப்படும் விளையாத, சிறியதான, பழக்காத காவெட்டு பழங்களும் கூட வீணாக்காமல் சேகரிக்கப்பட்டு சந்தைக்கு கொண்டு வரப்பட்டு சிறிது குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

## வெயிலின் தாக்கம் குறைந்ததால் மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள்

தலைவாசல்: தலைவாசல், வீரகனூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில், வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. கடந்த வாரங்களில் மழை பெய்ததால், மண் ஈரப்பதமாக இருந்தது. அதனால், உழவு வேலைகளை, சிலர் துவங்கினர். சேலம் உள்ளிட்ட பகுதிகளில் மழைப்பொழிவு இருந்து வரும் நிலையில் மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். அக்னி நட்சத்திரம் விடை பெற்றாலும், வெயிலின் தாக்கம் ஒருவார காலத்திற்கு அதிகரிக்கும் என கூறப்பட்டது. அதனால், விவசாயிகள் அஞ்சினர். வெயிலின் தாக்கம், ஜனவரி முதல், அதிகமாக இருந்ததால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இரு நாட்களாக, தலைவாசல் ஒன்றியத்தின் சில இடங்களில், மழைப்பொழிவு இருந்து வருகிறது. நேற்று காலை முதல், வானம் மேகமூட்டமாய் இருந்ததுடன், குளிர்ந்த காற்று வீசியது. வெயில், சராசரியாக இருந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நெல், மக்காச்சோளம் பயிர்களில் அதிக மகசூல் பெறுவது எப்படி? வேளாண் அறிவியல் மையம் விளக்கம்

அரியலூர், : நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து ஆகிய பயிர்களில் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது குறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் அழகுகண்ணன் விளக்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:அரியலூர் மாவட்ட விவசாயிகள் ஜூன் மாதம் (ஆனி மாதம்) செய்ய வேண்டிய வேளாண் பணிகளை விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியம்.

அரியலூர் மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் முதலில் தரமான வீரிய ஒட்டு ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு திருந்திய

நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்ய 2 முதல் 3 கிலோ விதை போதுமானது. நெல் நடவு செய்ய 100 மீட்டர் அளவில் மேட்டுபாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும். நாற்றங்காலில் 70 சதவீதம் மண் கலவை 20 சதவீதம் நன்கு மக்கிய தொழு உரம் 10 சதவீதம் நெல் உமி மற்றும் ஒன்றரை கிலோ டை அமோனியம் பாஸ்பேட் அல்லது 2 கிலோ கலப்பு உரக்கினை பொடியாக்கி கலந்து இடவேண்டும். மேலும் இரண்டு கிலோ வீதம் அஸோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரக்கினை இடவேண்டும். விதை விதைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு முளைகட்டுதல் செய்ய வேண்டும். அதற்கு விதைகளை 24 மணி நேரம் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் சூடோமோனஸ் என்ற அளவில் தண்ணீரில் கரைத்துக்கொண்டு விதைகளை ஊற வைக்க வேண்டும். பிறகு வடிகட்டி ஊற வைத்த விதைகளை காய வைத்தல் வேண்டும். விதை முளைத்து வேர் பிரியும் போது விதைக்க வேண்டும். சூடோமோனஸ் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம் செம்புள்ளி, குலைநோய் மற்றும் கதிர் அழுகல் நோய் வருவதை கட்டுப்படுத்தலாம்.

இதேபோன்று மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள், வயலினை மூன்று முறை நன்றாக உழுது அடியுரமாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம், யூரியா 30 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 186 கிலோ மற்றும் 33 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். மேலும் அடியுரமாக அஸோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தினை ஒரு கிலோ வீதம் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். துத்தநாக சத்து குறைபாடு இருப்பின் ஏக்கருக்கு 5 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். தரமான வீரிய ஓட்டு ரகமான விதை, ஏக்கருக்கு 8 கிலோ போதுமானதாகும். விதைக்கும் போது பார் அமைத்து வரிசைக்கு வரிசை 2 அடி இடைவெளி விட்டு விதையினை விதைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நெல் மற்றும் மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெப்ப சலனத்தால் மழை

மதுரை, : கத்திரி வெயிலின் வெப்ப சலனத்தால், மதுரையில் மழை பெய்தது. கோடையின் உச்சமான அக்னி நட்சத்திரம் கடந்த 4ம் தேதி ஆரம்பமாகி 10 நாட்கள் வெயில் வாட்டி எடுத்தது. பிறகு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் சில நாட்களுக்கு முன்பு மழை பெய்தது. இதனால் சற்று வெப்பம் தனிந்து இருந்ததுமீண்டும் கடந்த ஒரு வாரமாக கத்திரி வெயில் அகோரமாகி கோர தாண்டவமாடியது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்துகிறது.

மதுரையிலும் வெயிலின் அளவு 104 டிகிரிக்கு ஏறியது. வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. மதிய வேளையில் அனல் காற்று வீசியது. வெளியில் மக்கள் தலை காட்ட முடியாமல் தவித்தனர். உச்சியிலும், தரையிலும் கொதித்தது. பெண்கள் குடையுடனும், டூவீலரில் சென்ற பெண்கள் தலையில் துணியை போர்த்தியபடி சென்றனர். இரவிலும் தூங்க முடியாத அளவுக்கு அதிகமாக புழுக்கமாக இருந்ததால், பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர். அதிக வெப்ப சலனம் காரணமாக மதுரையில் நேற்று மதியம் திடீரென்று வானில் மேகமூட்டம் ஏற்பட்டது. பலத்த காற்று வீசியது. பின்பு மாட்டுத்தாவணி, ஒத்தக்கடை, புதூர் உள்ளிட்ட பகுதியில் சுமார் கால்மணி நேரம் பலத்த மழை பெய்தது. இந்த மழை நகரில் பல்வேறு பகுதியில் தூறலாகவும் இருந்தது. மாவட்டத்தின் பல பகுதியில் ஆலம்கட்டி மழை என அழைக்கப்படும் ஐஸ் கட்டியுடன் மழை கொட்டியது. சரியாக மழை பெய்யாத காரணத்தால் இந்த மழை சூட்டை அதிகரித்துவிட்டதாகவும் பொது மக்கள் கூறுகின்றனர்.

## நத்தம் பகுதியில் முந்திரி பழங்கள் அறுவடை தீவிரம் ஒரு பழம் 'ஒரு ரூபாய்'

நத்தம், நத்தம் அருகே கரந்தமலை, பெரியமலையூர், சின்னமலையூர், பள்ளத்துக்காடு மற்றும் மலை அடிவாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான முந்திரிமரங்கள் உள்ளன. ஆண்டுக்கு ஒருமுறை விளைச்சல் பெறும் இந்த மரம் மே, ஜூன் மாதங்களில் பழங்கள் அறுவடையாகிறது. தற்போது லிங்காவடி, மலையூர், உலுப்பக்குடி பல மலையடிவார பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட முந்திரி பழங்கள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இந்த பழங்கள் தரம்

பிரிக்கப்பட்டு மதுரை, கடலூர் மாவட்டம் மற்றும் உள்ளூர் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. நத்தம் பகுதியில் ஒரு முந்திரி பழம் ரூ.1க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

## ஓட்டப்பிடாரம் பகுதியில் பலத்த காற்றுடன் மழை: வெப்பம் தணிந்தது

ஒட்டப்பிடாரம், : ஒட்டப்பிடாரம் பகுதியில் நேற்று மதியம் பலத்த காற்றுடன் கூடிய இதமான மழை பெய்ததால் கோடை வெப்பம் தணிந்தது. அக்னி நட்சத்திரம் முடியும் தருவாயில் ஓட்டப்பிடாரம், மணியாச்சி, புதியம்புத்தூர் பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகமாகியதால் மக்கள் கடுமையாக அவதிப்பட்டனர்.இந்நிலையில் நேற்று மதியம் வெப்பத்தின் தாக்கம் குறைந்து இதமான காற்றுடன் கூடிய மழை பெய்தது. சில மணித்துளிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இடியுடன் மின்னலும் அதிகமாகவே உயரழுத்த மின்சாரம் பழுதாகியது. திடீர் மழையால் மக்கள் கோடை வெப்பத்திலிருந்து நிம்மதி பெருமூச்சு விட்டனர். மழை காரணமாக மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஏற்கனவே மானாவாரி நிலங்களில் அறுவடை முடிந்துவிட்டன. இதனால் நிலங்களை அடுத்த விவசாயத்திற்கு தயார்படுத்திடும் உழவு பணிகளை இனி மேற்கொள்வதற்கு இந்த மழை உதவும். இந்த மழை விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதுபோன்ற மழை கடந்த 10 தினங்களுக்கு முன்பு இரண்டு நாட்கள் பெய்தது மிகவும் குறிப்பிடத்தக்கது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவையில், மீன் விலை கடும் உயர்வு

கோவை

கோவையில் மீன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

<u>தடைக்காலம்</u>

தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. இதனால் கடந்த 1½ மாதங்களாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. இதனால் தமிழகத்துக்கு கேரளாவில் இருந்து மீன்கள் வந்து கொண்டிருந்தன. இதுதவிர தமிழகத்தின் ஆழ்கடலில் அல்லாமல் கடலோரங்களில் பிடிக்கப்படும் மீன்களும் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தன.

கோவைக்கு ராமேசுவரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், சென்னை மற்றும் கேரள மாநிலத்தில் திரூர், எர்ணாகுளம் ஆகிய இடங்களில் இருந்து மீன்கள் தினமும் 25 லோடு வருகின்றன. இதுவரை மீன்பிடி தடைக் காலம் அமலில் இருந்ததால் கடல் மீன்கள் வரத்து குறைவாக இருந்தது. ஆனாலும் அதை சமாளிக்க கேரளாவில் இருந்து மீன்கள் வந்தாலும் தேவை அதிகமாக இருந்ததால் மீன்கள் விலை குறைய வில்லை.

<u>விலை உயர்வு</u>

கோவை உக்கடம் பைபாஸ் சாலையில் உள்ள மீன் மார்க்கெட்டில் மீன்களின் விலை நேற்று உயர்ந்திருந்தது. வஞ்சிரம் மீன் இதுவரை ஒரு கிலோ ரூ.700 வரை தான் விற்றது. அது நேற்று ரூ.1000–க்கு விற்றது. பாறை மீன் ரூ.500, சங்கரா மீன் ரூ.300, விறால் மீன் ரூ.500, மத்தி ரூ.150, நெத்திலி ரூ.300, ராமேசுவரம் நண்டு

ரூ.500–க்கும் விற்றன. மொத்தத்தில் எல்லா மீன்களுமே 25 சதவீதம் வரை விலை அதிகமாக விற்கிறது.

இது குறித்து மீன் வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>காரணம் என்ன?</u>

தமிழகத்தில் மீன்பிடி தடை காலம் அமலில் இருந்ததால் மீன்கள் விலை அதிகரித்திருந்தது. மீன்பிடி தடைக்காலம் நேற்று முடிந்தாலும் மீன் விலை குறையாது. இதற்கு காரணம் வருகிற 1–ந் தேதி முதல் கேரளாவில் மீன்பிடி தடை காலம் அமலுக்கு வருவதால் அங்கு மீன் பிடிக்க முடியாது. எனவே அங்குள்ள வியாபாரிகள் தமிழகத்துக்கு வந்து மீன்களை மொத்தமாக வாங்கி சென்று விடுவார்கள். எனவே தமிழகத்தில் மீன்களின் விலை இன்னும் 1½ மாதத்துக்கு குறையாது.

தமிழகத்தில் தான் அதிக வகையிலான மீன்கள் கிடைக்கின்றன. கேரள கடலில் இத்தனை வகை மீன்கள் கிடைப்பதில்லை. எனவே கேரள வியாபாரிகள் இங்கு வந்து தங்கள் தேவைக்கு மீன்களை வாங்கி சென்று விடுவதால் கோவையில் மீன்களின் விலை தொடர்ந்து அதிகமாகத் தான் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.1000 சரிவு ஒரு கிலோ ரூ.500-க்கு விற்பனை**



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பிச்சி பூ விலை ரூ.1000 சரிவடைந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.500-க்கு விற்பனை செய்யப்பட்டது.

குவிந்து கிடக்கும் பூக்கள்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி, நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்து பூக்களை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் கொண்டு வருகிறார்கள்.

தினமும் அதிகாலையிலையே மார்க்கெட்டிற்கு பூக்களை விவசாயிகள் கொண்டு வந்து குவித்து விடுவார்கள். அப்போதே வியாபாரிகளும் வந்து விடுவார்கள். அவர்கள் குவிந்து கிடக்கும் பூக்களை போட்டி போட்டு ஏலம் எடுத்து செல்வார்கள். வியாபாரமும் மும்முரமாக நடைபெற தொடங்கி விடும்.

பிச்சி பூ விலை சரிவு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.1500-க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று விலை ரூ.1000 சரிவடைந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.500-க்கு

விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை சரிவு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறியதாவது:- " இன்று (நேற்று) முகூர்த்த தினம், கோவில் விழாக்கள் போன்றவை இல்லாததால் பிச்சி பூவின் தேவை குறைவாகவே இருந்தது. இதனால் வியாபாரிகள் பிச்சி பூக்களை ஏலம் எடுக்க மும்முரம் காட்டவில்லை. இதனால் தான் விலை சரிவடைந்து காணப்பட்டது" என்று கூறினார்.

விவரம்

மேலும், மற்ற பூக்களின் விலை விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:- முல்லை ரூ.400-க்கும், கனகாம்பரம் ரூ.250-க்கும், மல்லிகை ரூ.150-க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.150-க்கும், வெள்ளை சிவந்தி ரூ.100-க்கும், மருக்கொழுந்து ரூ.100-க்கும், பட்டன்ரோஸ் ரூ.100-க்கும், அரளி ரூ.80-க்கும், சிவந்தி ரூ.80-க்கும், மஞ்சள் கேந்தி ரூ.60-க்கும், கொழுந்து ரூ.60-க்கும், கேந்தி ரூ.60-க்கும், சம்பங்கி ரூ.50-க்கும், வாடாமல்லி ரூ.30-க்கும், மாம்பழ கேந்தி ரூ.30-க்கும், கோழிப்பூ ரூ.25-க்கும், துளசி ரூ.15-க்கும், பச்சை ரூ.5-க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300-க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.20-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: தளியில் 100 மில்லி மீட்டர் பதிவானது



கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிக பட்சமாக தளியில் 100 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

<u>பலத்த மழை</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த மாத தொடக்கம் முதல் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக மழை இன்றி வெயில் மக்களை வாட்டி வதைத்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. கிருஷ்ணகிரி, பர்கூர், ஓசூர் மற்றும் சுற்று வட்டாரத்தில் சுமார் ஒரு மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது.

இதில் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை காரணமாக கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை எதிரில் உள்ள புளிய மரம் வேரோடு சாய்ந்தது. அந்த நேரத்தில் அங்கு யாரும் செல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

<u>மழை அளவு</u>

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:–

தளி – 100, கிருஷ்ணகிரி – 47, ஓசூர் – 46, ராயக்கோட்டை – 15, ஊத்தங்கரை – 9, சூளகிரி – 6, அஞ்செட்டி – 6. மாவட்டம் முழுவதும் மொத்தம் 229 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் குண்டு பாகற்காய் சீசன் மும்முரம் பல்வேறு தரப்பு மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்**



அலங்காநல்லூர்,

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குண்டு பாகற்காய் சீசன் மும்முரமடைந்துள்ளது. காய்கறி மார்க்கெட்டிற்கு அதிக அளவு வந்துள்ள இந்த பாகற்காயை சர்க்கரை நோயாளிகள் உள்பட பல்வேறு தரப்பு மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

குண்டு பாகற்காய் சாகுபடி

மதுரை மாவட்டப் பகுதியில் கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டை, சீனிஅவரை மற்றும் பல்வேறு காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இதில் மருத்துவ குணம் நிறைந்த குண்டு பாகற்காயும் ஒன்று. இதன் சீசன் தற்போது

மும்முரமாக உள்ளது. பெரும்பாலும் இவை கண்மாய்களில் மானாவாரியாகவே பயிரிடப்படும். இது தரையில் படரக்கூடியதாகும். விதை போட்டு 60 நாட்களில் மகசூல் தரும் தன்மை பெற்றது. இதை முழுக்க முழுக்க சர்க்கரை நோயாளிகளே விரும்பி வாங்கி செல்கின்றனர். இந்த காயை பொரியல், கூட்டு, சுண்ட வைத்தல், புளிக்குழம்பு உள்ளிட்ட பல்வேறு வகையான உணவு சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

மாவட்டத்தில் அலங்காநல்லூரை அடுத்த வலையபட்டி, சின்னபாலமேடு, தெத்தூர், அழகர்கோவில், வலையபட்டி, புதுப்பட்டி, பொதும்பு, காஞ்சரம்பேட்டை புதுக்குளம், அவனியாபுரம், திருப்பரங்குன்றம் உள்பட பல்வேறு கண்மாய் பகுதிகளில் இந்த குண்டு பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ குணம்

இதன் அறுவடை சீசன் தற்போது இந்த பகுதிகளில் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஜூன் மாதம் கடைசி வரை இந்த மகசூல் இருக்கும். மேலும் மருத்துவ குணமிக்க இந்த பாகற்காய் அதிக கசப்பு தன்மை பெற்றது. குண்டு வடிவில் காய்க்கும் தன்மை உள்ளது. தவிர மருத்துவ ரீதியாக சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தி, குடற்புழுக்களை முழுமையாக நீக்கும். இந்த பாகற்காய் மதுரையில் சிம்மக்கல், யானைக்கல், கோரிப்பாளையம், பெரியார்நிலையம் மற்றும் அண்ணாநிலையப் பகுதிகளிலும் இதர காய்கறி சந்தைகளிலும் தற்போது அதிக அளவு விற்பனைக்கு வந்துள்ளது.

தற்போதைய சீசனில் ஒரு கிலோ பாகற்காய் ரூ.120க்கும், ஒரு படி ரூ.80க்கும் விற்பனையாகிறது. இதே பாகற்காய் கடந்த வருடம் கிலோ ஒன்றுக்கு ரூ.60க்கும், ஒரு படி ரூ.40க்கும் விற்றது. இதில் பந்தல் பாகற்காய் என்று ஒரு ரகம் உள்ளது. இந்த காய் எப்போதும் சந்தைகளில் கிடைக்கும். இதற்கு தகுந்த கிராக்கி கிடையாது. இருப்பினும் குண்டு பாகற்காய்க்கு தனி கிராக்கி உள்ளது. இந்த காய் வறட்சியில் விளையும் தன்மை பெற்றதாகும். சமீபத்தில் பெய்த மழையினால் வரத்து அதிகரித்திருந்தாலும், விலை மட்டும் விட்டுக்கொடுக்காமல் விற்பனை செய்யப்படுகிறது. கோடை காலத்தில் மட்டுமே இந்த குண்டு பாகற்காய் அதிகம் பயிரிடப்படும்.

**கோடைமழை எதிரொலி: நாமக்கல் உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரிப்பு விலை குறைய தொடங்கியது**



நாமக்கல்,

கோடை மழை காரணமாக நாமக்கல் உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் காய்கறிகளின் விலை குறைய தொடங்கி உள்ளது.

<u>உழவர் சந்தை</u>

நாமக்கல் – கோட்டை சாலையில் உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களின் நிலங்களில் விளையும் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். இந்த மாதம் தொடக்கத்தில் கடுமையான வறட்சி நிலவியதால், உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து மிகவும் குறைந்தது. இதனால் காய்கறிகளின் விலை உயர்ந்தது.

ஆனால் கடந்த சில வாரங்களாக கோடை மழை ஆங்காங்கே பெய்து வருவதால், காய்கறிகளின் வரத்து அதிகரிக்க தொடங்கி உள்ளது. இதனால் அதன் விலையும் குறைய தொடங்கி உள்ளது.

விலை குறைந்தது

இது குறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறியதாவது:– கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை 24 டன் காய்கறிகள் மட்டுமே விற்பனைக்கு வந்து இருந்தன. இவை ரூ.6 லட்சத்து 44 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று 3 டன் அதிகரித்து 27 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்து இருந்தன. இவை ரூ.7 லட்சத்து 55 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

கடந்த வாரம் கிலோ ரூ.100–க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ் நேற்று ரூ.80–க்கும், ரூ.150 வரை விற்பனை செய்யப்பட்ட பச்சை மிளகாய் நேற்று ரூ.80–க்கும் விற்பனை செய்யப்பட்டன. கத்திரி கிலோ ரூ.20, தக்காளி ரூ.40, சின்ன வெங்காயம் கிலோ ரூ.32–க்கு விற்பனை செய்யப்பட்டது. கோடை மழை காரணமாக காய்கறிகளின் வரத்து அதிகரித்து உள்ளதால், அவற்றின் விலை குறைந்து வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கர்நாடகாவில் பறவைக்காய்ச்சல் எதிரொலி: நாமக்கல்லில் 45 அதிவிரைவு படை அமைத்து கண்காணிப்பு**



நாமக்கல்,

கர்நாடகாவில் பறவை காய்ச்சகோழிகளை தாக்கி இருப்பதை தொடர்ந்து நாமக்கல்லில் கால்நடை துறையினர் 45 அதிவிரைவு படை அமைத்து கண்காணித்து வருகின்றனர்.

<u>பறவைக்காய்ச்சல்</u>

கர்நாடக மாநிலத்தில் பறவைக்காய்ச்சல் அறிகுறி கண்டறியப்பட்டு உள்ளதை தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் பறவை காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு பல்வேறு பாதுகாப்பு மற்றும் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் எதிரொலியாக அனைத்து கோழிப்பண்ணை உரிமையாளர்களும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து கோழிக்குஞ்சுகள், கோழிகள், கோழி முட்டைகள், வாத்துகள், வாத்து முட்டைகள், வாத்துக்குஞ்சுகள், கோழித்தீவனங்கள் போன்றவற்றை வாங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கோழிப் பண்ணையாளர்களும் பண்ணையின் நுழைவு வாயிலில் கிடங்கு அமைத்து அதில் குளோரின் டைஆக்சைடு கிருமி நாசினி கலவை கலந்து வைப்பதோடு, உரிய உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டு உள்ளது. கோழிப்பண்ணையினுள் நுழையும் வாகனங்களின் சக்கரங்களில் கிருமி நாசினி தெளித்த பின்னரே, பண்ணைக்குள் அனுமதிக்கப்படுகின்றன.

<u>அதிவிரைவு படை</u>

மேலும் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 45 அதிவிரைவு படை அமைக்கப்பட்டு, 24 மணி நேரமும் கோழிப்பண்ணைகளை கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

நாமக்கல் மண்டலத்தில் மொத்தம் சுமார் 1,100 முட்டையின கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் 4 கோடிக்கும் மேல் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த பண்ணைகளில் மாதந்தோறும் 20 ஆயிரம் ரத்த மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு

அனுப்பி சோதனை மேற்கொள்ளப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தற்போது அது மேலும் உயர்த்தப்பட்டு இருப்பதாகவும் கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே கர்நாடக மாநிலத்தில் பறவைக்காய்ச்சல் கோழிகளை தாக்கி உள்ளதால், தமிழகத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படும் முட்டை 20 சதவீதம் வரை குறைந்து இருப்பதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக வருங்காலங்களில் முட்டை விலை குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## கொல்லிமலையில் அன்னாசி பழம் அறுவடை தொடங்கியது



கொல்லிமலையில் உள்ள துவரம்பள்ளம் கிராமத்தில் விளைந்துள்ள அன்னாசி பழங்களை படத்தில் காணலாம்.

கொல்லிமலையில் தற்போது அன்னாசி பழம் அறுவடை சீசன் தொடங்கி உள்ளது. கேரள மாநிலத்தில் விளையும் அன்னாசி பழங்களை விட இங்கு விளையும் பழங்கள் சுவை மிகுந்ததாக இருப்பதால் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி செல்கின்றனர்.

அன்னாசிஅறுவடை

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அடிக்கடி குளு, குளு சீசன் நிலவி வருவதால் சீதோஷ்ண நிலைக்கு புகழ்பெற்று வரும் அந்த மலைப்பகுதி பழங்களுக்கும் பெயர் பெற்றதாக விளங்கி வருகிறது. அந்த வகையில் அங்கு

விளைந்து வரும் அன்னாசி பழங்கள் முதன்மையாக காணப்படுகிறது. கொல்லிமலையில் உள்ள குண்டூர்நாடு, அரியூர்நாடு ஆகிய பகுதிகளில் சுமார் 500 ஏக்கருக்கு மேலாக அன்னாசி பழம் பயிரிடப்பட்டு உள்ளது. மலைப்பகுதியில் இந்த இரு நாடுகளில் பாறைகள் அதிகமாக காணப்படுவதாலும், அதிக இடங்கள் சரிவாக காணப்படுவதாலும் அன்னாசி பழங்கள் விளைச்சலுக்கு ஏற்ற வகையில் அமைந்து உள்ளது.

இங்கு 'கியூ' ரக அன்னாசி மற்றும் மொரிசியஸ் வகை அன்னாசி ஆகிய 2 வகை மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. அன்னாசி செடியை நடவு செய்து 18 மாதங்கள் கழித்த பின்பே அன்னாசி பழம் அறுவடைக்கு வருகிறது. இந்த வருடம் தற்போது சீசன் தொடங்கி, ஆகஸ்டு மாதம் வரை நடைபெறும். தற்போது அறுவடை தொடங்கி நடந்து வருகிறது.

மிகுந்த சுவை உடையது

கடந்த ஆண்டு ஒரு மூட்டை (25 எண்ணிக்கை) ரூ.450 வரை விற்பனை ஆனது. சீசன் முடியும் தருவாயில் ரூ.600 வரை விற்பனையானது. கடந்த ஆண்டில் அறுவடைக்கு முன்னதாகவே அடிக்கடி மழை பெய்ததால் பூக்கள் அதிகமாக பூத்து காய்கள் அதிகமாக விளைந்தது. இந்த வருடம் மழை குறைவால் விளைச்சலும் சற்று குறைவாக உள்ளது.

கொல்லிமலையின் சீதோஷ்ண நிலை, மண்ணின் வளம் ஆகியவற்றால் இங்கு விளையும் அன்னாசி பழங்கள் மிகுந்த சுவை உடையதாக காணப்படுகிறது. இதனால் வெளிமாவட்ட, வெளி மாநில வியாபாரிகள் கேரளாவுக்கு செல்வதை விட இங்கு அதிகமாக வந்து அன்னாசியை போட்டி போட்டு விற்பனைக்கு வாங்கி செல்கின்றனர்.